# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1854/5 - 2014 මාර්තු මස 17 වැනි සඳුදා - 2014.03.17

1854/5ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல: VSW/DS/LAND/WS/2011

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கி றார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

ஆரம்ப பட இல. யா 2715

| | | |
|---|---|---|
| அமைப்பு. | கிராமம்: | : மானிப்பாய் |
| | பிரதேச செயலகப் பிரிவு | :வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் |
| | மாவட்டம் | :யாழ்ப்பாணம். |
| | மாகாணம் | :வடக்கு மாகாணம். |

01. துண்டு இல. 01:

காணியின் பெயர்: சூடுவெந்தபுலம்; விபரம்:28 தென்னைமரம் 20-30 வருடங்கள், 23 பனைமரம் 50-60 வருடங்கள்,ஒரு நிரந்தர கட்டடம், ஒரு சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறும் கொண்ட தோட்டம்.; உரிமை கோருபவர்: சிவசம்புநாதன் சிவகுருநாதன், சிவசம்புநாதன் சிவாநந்தன் கட்டுடை, மானிப்பாய், யாழ்ப்பாணம்; விஸ்தீரணம்: 0.2988 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப் பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

எஸ்.முரளிதரன்,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு,சண்டிலிப்பாய்

பிரதேச செயலகம்,
வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய்,
2014, மார்ச்சு 14.

காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் சாதனங்களையும் விசாரனையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

4-35

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இலக்கம்: 6/3/7/15/11/9
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்:LD/05/2007/MV/11E

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ், 11.09.2013 ஆந் திகதிய 1827/10 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பூ.பூ.வ.18 குறைநிரப்பி இலக்கம் 18, பத்திர இலக்கம் 39 ஐக் கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 1662 ஐக் கொண்ட காணித் துண்டின் விசாலம் 0.01346 ஹெக். எனக்குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது 0.1346 ஹெக். என திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது;

டீ.ஆர்.பீ.என்.பீ.கருணாதிலக
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2014, மார்ச்சு 12.

4-36